தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 4, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 17, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற.''

ஒரு தொழில் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் உறுதியே ஆகும். மற்றைய எல்லாம் வேறானவை.

1. வினாக்கள் விடைகள் :

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

வணிக வரிச் சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்.

*3818 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகவரிச் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். வரிவிதிப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து வணிகர்களையும், வணிகக் கழகங்களையும் சந்தித்த பின்னர் யோசனைகள் தெரிவிப்பதற்காக அரசினால் அமைக்கப்பட்ட வரிவிதிப்பு திருத்தாய்வுக் குழுவானது சில

[1990 ஏப்ரல் 17

மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து சட்டங்கள், விதிகள், படிவங்கள் ஆகியவற்றின் படிகளைத் (நகல்களை) தமிழில் வழங்குமாறு முறையீடுகள் செய்து கொள்ளப்பட்டன.

(ஆ) வணிகவரி தொடர்பான சில வணிகவரிச் சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளனவாயினும், சட்ட ஆட்சி மொழி ஆணையம் அவற்றை ஆய்வில் வைத்துள்ளது.

மக்கள் நீதிமன்றம்.

*4890 திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் மோட்டார் வாகன விபத்து சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மக்கள் நீதிமன்றம் என்பது தொடர்ந்து அமர்ந்து வழக்குகளை முடிவு செய்யும் மன்றங்கள் அல்ல. வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்கள் சமரசம் காண உடன்படும் வழக்குகள் இருப்பின் தமிழ் நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவினால் மக்கள் மன்றங்கள் நடத்தப் படுகின்றன.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் நடைபெறுவதில் நீண்ட காலதாமதம் ஏற்படுவதால் வழக்குகளில் பெறுகின்ற அந்த நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெறுவதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. எனவே மக்கள் நீதிமன்றம் மூலமாக எளிமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கின்ற வகையில் நிரந்தரமாக நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதேகூட மக்கள் நீதிமன்றத்தில் மோட்டார் வழக்கு சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப்பட்டு நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. அதைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS